# கமநல அபிவிருத்தி நிதியம் - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கமநல அபிவிருத்தி நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

தெளிகருவி மற்றும் புல்டோஸர் சேவைகளுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 10,746,805 தொகையான சேவைக் கட்டணங்கள் வருமானத்திற்கு எடுக்கப்படாது நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மிகை ரூபா 10,746,805 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் காசு மீதியை திறைசேரி ஏடுகளுடன் இணக்கம் செய்கையில் ரூபா 651,797 தொகையான வேறுபாடு 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட போதிலும் இது மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 விடயங்களில் நிதிக்கூற்றுக்களிலும் பட்டோலைகளிலும் காண்பிக்கப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 93,042 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) “ஜப்பான் யென்” உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாயக் குழுக்கள் மற்றும் விவசாயச் சங்கங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட விவசாய உபகரணங்களுக்காக தவணை முறையில் அறவிடப்பட்ட பணம் எதிரிணை நிதியக் கணக்கிற்குச் செலவு வைப்பதற்காக விவசாய அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 259,438,586 தொகையான தவணைப்பணம் 2012 திசெம்பர் 31 வரையும் நிதியத்தின் வைப்புக் கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

மேலும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டிலும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த டிரக்டர்களுக்காக தவணைப்பணத்தை அறவிடுதல் மிகவும் தாமத நிலையில் காணப்பட்டதுடன் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை தவணைப் பணம் ரூபா 340,200,616 ஆகக் காணப்பட்டது.

(ஆ) 1995 மற்றும் 1996 ஆம் ஆண்டுகளின் போது நிதியத்தினால் பகிர்ந்தளிக்கப்பட்ட இரு சக்கர உழவு இயந்திர இழுவைப் பெட்டி மற்றும் நான்கு சக்கர உழவு இயந்திர இழுவைப் பெட்டிகளுக்காக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான தவணைப்பணம் முறையே ரூபா 1,498,566 மற்றும் ரூபா 4,749,500 ஆகக் காணப்பட்டது.

(இ) 2001 ஆம் ஆண்டு முதல் இருப்புப் பற்றாக்குறையாக இனங்காணப்பட்டிருந்த ரூபா 450,000 தொகையை பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ந்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பெறவேண்டிய கணக்குகளில் 6 வருடங்களுக்கும் மேலான காலமாக காணப்பட்டு வரும் ரூபா 6,445,758 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்காக செயல்திறனான நடைமுறை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

அவதானிக்கப்பட்ட இணங்காமைகள் பின்வருமாறாகும்.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4(3)(இ) பந்தி | திரண்ட நிதியத்தில் மாற்றங்கள் கூற்று வேறாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நி.பி. 371(5) | நிதியத்தினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 767,332 பெறுமதியான முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 4,492,719 மிகையானதுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 1,690,383 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 6,183,102 ஆன அதிகரிப்பு சுட்டிக் காட்டப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 6,476,960 ஆல் குறைவடைந்தமை நிதிவிளைவுகளின் அதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1992 முதல் 2006 வரை யப்பான் உதவி செயற்திட்டத்தினால் 9 மாவட்டங்களின் 12 கமத்தொழில் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,646,803 பெறுமதியான உழவு இயந்திரங்களுக்காக ஒரு தவணைப் பணமேனும் அறவிடப்படாதிருந்ததுடன் அத் தவணைப்பணத்தை ஆக்கபூர்வமாக அறவிடும் நடைமுறை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 14 மாவட்டங்களுக்காக 2010 ஆம் ஆண்டின் போது பகிர்ந்தளிக்கப்பட்ட ரூபா 1,700,000 பெறுமதியான நீர்ப் பம்பிகளுக்காக தவணைப்பணம் அறவிடப்படும் சதவீதம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 46% ஆகக் காணப்பட்டது.

(இ) 11 மாவட்டங்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 37,785,110 பெறுமதியான உழவு இயந்திரக் கடன்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 19,533,639 தொகையான தவணைப்பணம் நிலுவையாகக் காணப்பட்டது. இந்த நிலுவையாகவுள்ள பணம் வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகையின் 51% ஆகக் காணப்பட்டது.

(ஈ) இரண்டு சக்கர உழவு இயந்திர இழுவைப்பெட்டிகளுக்காக வழங்கப்பட்டிருந்த கடன் 02 மாவட்டங்களில் முழுமையாக நிலுவையாகக் காணப்பட்டதுடன் 15 மாவட்டங்களின் ஒட்டுமொத்த அறவீடுகள் 10% அளவிலான ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்கான பாதீட்டில் 07 அபிவிருத்திச் செயற்பாடுகளிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 47,650,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான தரவுகளுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஏக்கர் வரி அறவீடு

(ஆ) வைப்புக் கணக்குகள் தீர்க்கப்படல்

(இ) கடன் அறவீடு

(ஈ) சொத்துப் பயன்பாடு

(உ) முற்பண வழங்கல்